சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலன் - மண் பரிசோதனை நிலையங்கள் (36), நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் (16) மற்றும் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் (குடுமியான் மலை) ஆகிய திட்டங்களை 01.04.2023 முதல் 31.03.2024 வரை தொடர்ந்து செயல்படுத்த ரூ.2070.66 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை-உழவர் நலத் (வேஉ_4) துறை

அரசாணை (நிலை) எண். 202

நாள் :11.09.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், ஆவணி 25

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.25, வேளாண்மை-உழவர் நலத் (வே.உ_4) துறை, நாள் 20.02.2023.
2. வேளாண்மை ஆணையரின் கடித எண். ஆகூபி2/49942/ 2023, நாள் 21.08.2023.

---

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 32 மண் பரிசோதனை நிலையங்கள், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் ஒரு மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் (குடுமியான் மலை) ஆகிய திட்டங்களை 01.04.2022 முதல் 31.03.2024 வரை, இரண்டு ஆண்டுகளுக்கு தொடர, தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கியும், 01.04.2022 முதல் 31.03.2023 வரை மேற்படி திட்டத்தினை செயல்படுத்திட ரூ.2028.08 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை ஆணையரின் கடிதத்தில், 2015-2016-ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் மண்வள அட்டை திட்டத்தின்கீழ் (Soil Health Card Scheme) நேரடியாக கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளின் விபரங்கள் மற்றும் புவியியல் விவரங்களுடன் கூடிய கட்ட அடிப்படையில் (Grid Sampling) மண் மாதிரிகளை சேகரம் செய்து, ஆய்வகங்களில் ஆய்வு மேற்கொண்டு, ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் பயிருக்குத் தகுந்த உரப் பரிந்துரைகளுடன் கூடிய மண்வள அட்டை வழங்கப்பட்டு வருகின்றது எனவும், ஒன்றிய அரசின் இந்த திட்டமானது நீடித்த நிலையான வேளாண்மைக்கான தேசிய இயக்கத்தின் கீழ் 60:40 என்ற விகிதாச்சாரத்தில் ஒன்றிய மற்றும் மாநில அரசின் நிதிப் பங்கீட்டு முறையில் செயல்படுத்தப்படும் திட்டமாகும் எனவும், மாநில அரசு பங்கீடான 40% தொகை மண் பரிசோதனை நிலையம் மற்றும் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் கணக்குத் தலைப்பின்கீழ் உள்ள நிதி ஒதுக்கீட்டினை கொண்டு செயல்படுத்தப்படுகின்றது எனவும், இத்திட்டத்தில் மண் பரிசோதனை நிலைய / நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்களால்

[கு.பி.பா]

நேரடியாகவே கிராமங்களுக்கு சென்று மண் மாதிரி சேகரம் மேற்கொள்ளப்படுகிறது எனவும், அவ்வாறு சேகரிக்கப்படும் மண் மாதிரிகளில் கூடுதலாக கால்சியம், மெக்னீசியம், கந்தகம் மற்றும் போரான் போன்ற சத்துகள் ஆய்வு செய்யப்பட்டு, அனைத்து ஆய்வு முடிவுகளும் கணினி மூலம் இணையத்தில் பதிவேற்றம் செய்து, அதனடிப்படையில் மண் ஆய்வு இலக்கானது நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், வேளாண்மை ஆணையர் தமது கருத்துருவில், வேளாண்மை உற்பத்தி பெருக்கத்தில் மண் வளம் மிகவும் இன்றியமையாதது எனவும், மண் பரிசோதனை செய்து, மண்ணின் தன்மைகேற்ப உரமிடுவதன் மூலம் மண் வளம் பாதுகாக்கப்படுவதுடன், கூடுதல் உர செலவினம் இத்திட்டத்தால் தவிர்க்கப்படுவதுடன் கூடுதல் மகசூலும் சாத்தியப்படுகிறது என எடுத்துரைத்து, மண் ஆய்வு செய்வதன் முக்கிய நோக்கம் மண்ணின் தன்மை மற்றும் மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை அறிந்து அதற்கேற்ப உரம் மற்றும் பயிர் பரிந்துரை வழங்குவது அவசியம் எனவும், இதன்மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களின் வளங்களை அறிந்து அதற்கேற்ப பயிரிடுவர் எனவும் தெரிவித்து 36 மண் பரிசோதனை நிலையங்கள், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் (குடுமியான் மலை) ஆகிய திட்ட அலுவலகங்களில் 01.04.2023 முதல் 31.03.2024 வரை, திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட ரூ.3229.35 இலட்சத்திற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு (இலட்சம்) |
|---|---|---|
| 1 | மண் பரிசோதனை நிலையங்கள் (36) | 2242.19 |
| 2 | நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் (16) | 856.70 |
| 3 | மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் | 130.46 |
| | மொத்தம் | 3229.35 |

4. மேற்காணும் வேளாண்மை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று 36 மண் பரிசோதனை நிலையங்கள், 16 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் மற்றும் ஒரு மத்திய கட்டுப்பாட்டு ஆய்வகம் (குடுமியான் மலை) ஆகிய திட்ட அலுவலகங்களில், 01.04.2023 முதல் 31.03.2024 வரை திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்திட ரூ. 2070.66 இலட்சம் (ரூபாய் இருபது கோடியே எழுபது இலட்சத்து அறுபத்து ஆறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கலாம் எனவும் முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2402 – 00 மண்வள, நீர்வளப் பாதுகாப்பு – 101 மண்வள
ஆய்வும் சோதனையும் – மாநிலச் செலவினங்கள் – AA
மண் பரிசோதனை ஆய்வுக் கூடங்கள்
(த.தொ.கு. 2402 00 101 AA 30000) - ரூ.1472.95 இலட்சம்

2402 - 00 மண்வள, நீர்வளப் பாதுகாப்பு - 101 மண்வள ஆய்வும் சோதனையும் - மாநிலச் செலவினங்கள் - AE நடமாடும் மண்வளச் சோதனை ஆய்வுக் கூடங்கள்

(த.தொ.கு. 2402 00 101 AE 30000) - ரூ.498.49 இலட்சம்

2402 - 00 மண்வள, நீர்வளப் பாதுகாப்பு - 101 மண்வள ஆய்வும் சோதனையும் - மாநிலச் செலவினங்கள் - AF மையக் கட்டுப்பாட்டு ஆய்வுக் கூடம்

(த.தொ.கு. 2402 00 101 AE 30000) - ரூ.99.22 இலட்சம்

6. மண் மாதிரிகளை ஆய்வு செய்வதன் மூலம் பெறப்படும் வருவாயினை கீழ்காணும் கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:-

0401 - 00 - பயிர் வளர்ப்பு - 800 - ஏனைய வரவுகள் - AT மண்வளச் சோதனை ஆய்வுக்கூடங்களிலிருந்து கிடைக்கும் வரவுகள் - 237 விற்பனை வரவுகள் - 01 விவசாயம்

(IFHRMS D.P.Code : 0401 - 00 - 800 - AT - 23701)

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

8. மேலும், ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் 1,00,000 கட்டண மண் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், பெறப்படும் வருவாயினை அரசுக் கணக்கில் செலுத்த வேண்டும் எனவும் வேளாண்மை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. இவ்வாணை, நிதித் துறையின் அ.சா.கு. எண். 5471061, நிதி (வேளாண்மை - உழவர் நலன்) துறை, நாள் 07.09.2023-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>

வேளாண்மை ஆணையர், சென்னை-5.
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை - 18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை - 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.

<u>நகல்:-</u>
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலரின் தனிச்செயலர், சென்னை-9.
நிதித் (வேளாண்மை-உழவர் நலன்) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9. (2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
தொடர்புடைய கோப்பு எண்.5471061/வேஉ_4/2023.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/9/2023

பிரிவு அலுவலர்